**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.CC.No.26/2025**

Prosecution Witness : **LW - 5 / PW - 4**

Name : சித்ரா Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **09.02.2026**

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரம்பலூர் மாவட்டம், செட்டிகுளம் பிரிவு மின்வாரிய அலுவலகத்தில் ஆக்க முகவராக பணிபுரிந்த வருகிறேன். இந்த வழக்கு காலத்தில் சுத்தமல்லி மின் வாரிய அலுவலகத்தில் வணிக ஆய்வாளராக பணிபுரிந்தேன். வணிக ஆய்வாளராக என்னுடைய பணி மும்முனை மின் இணைப்பு கேட்டு, இணைய தளத்தில் பதிவு செய்யும் விண்ணப்பங்களை ஆய்வு செய்தும், இடத்தை ஆய்வு செய்தும், வரைபடம் தயார் செய்து, உதவி மின்பொறியாளரிடம் சமர்ப்பிப்பேன். இந்த நிலையில் இலவச மின் இணைப்பு வேண்டி, தக்கல் திட்டத்தின் கீழ் திரு.தர்மலிங்கம் என்பவர் மின் இணைப்பு கேட்டு விண்ணப்பம் பதிவு செய்திருந்தார். இடத்தை ஆய்வு செய்து, திட்ட மதிப்பீடு தயார் செய்து, உதவி மின் பொறியாளரிடம் சமர்பித்தேன். 07.02.2020 அன்று காலை 11.00 மணியளவில் தர்மலிங்கம் அவர்கள் உதவி மின் பொறியளார் அலுவலகத்திற்கு வந்து, தளவாட பொருட்கள் வாங்குவது பற்றி உதவி மின் பொறியாளர் ராஜுவ்காந்தியிடம் கேட்டு கொண்டிருந்தார். 03.00 மணி வரை அவர் ராஜுவ்காந்தியிடம் தான் தர்மலிங்கம் பேசிக்கொண்டிருந்தார். அவர்கள் என்ன பேசினார்கள், என்ன கேட்டுகொண்டார்கள் என்று எனக்கு தெரியவில்லை. 03.00 மணிக்கு மேல் உதவி மின்பொறியாளர் ராஜுவ்காந்தி பெரம்பலூர் அலுவலகத்திற்கு

**Meeting** க்காக சென்றுவிட்டார். 07.02.2020 அன்று நான், **AE** ராஜுவ்காந்தி (1ம் எதிரி), கணக்கீட்டார் மீனா ஆகியோர் அலுவலகத்தில் இருந்தோம். மற்ற ஊழியர்கள் **field Visit** க்காக போய் விட்டார்கள். 08.02.2020 அன்று மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமை, விடுமுறை நாளில் பணி செய்ய தலைமை பொறியாளர், பணியாணை போட்டிருந்தார். அதன்படி 01.30 மணிக்கு சுத்தமல்லி பிரிவு அலுவலகத்தில் சரவணன் **Foreman** (2ம் எதிரி) நானும் வரைபடம் போட்டுகொண்டிருந்தோம். அப்போது நிறைய போர் கரண்ட் பில் போடும் சீட்டில் **foreman** சரவணன் சாரை அழைத்து வந்து உட்கார வைத்தார்கள். சரவணன் சார் எப்போது வெளியே சென்றார் என்று நான் கவனிக்கவில்லை. நான் வரைபடம் போடுவதிலேயே இருந்தேன். நான் திரும்பி பார்த்து, ஏன் நிறைய பேர் வந்திருக்கிறீர்கள் என்று கேட்டேன், அதற்கு அவர்கள் ஒன்றுமில்லை நீங்கள் உட்காருங்கள் என்று சொல்லிவிட்டு, என் போனை வாங்கிகொண்டார்கள். போனை வாங்கிய பிறகு, என்ன என்று கேட்டபோது, நாங்கள் விஜிலென்ஸ் அலுவலகத்திலிருந்து வருகிறோம், போர்மேன் சரவணன் பணம் வாங்கியதால் அவரை பிடித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். நானும், போர்மேன் சாரும் இரவு 08.30 மணி வரை அலுவலகத்தில் தான் இருந்தோம். வீரமுத்து என்ற ஆப்பரேட்டரும் பக்கத்தில் இருந்தார். விஜிலென்ஸ் போலீசாரும் அங்கு தான் இருந்தார்கள். **AE** சாரை யார் அழைத்து வந்தார்கள் என்று தெரியவில்லை. ஆனால் **AE** சார் ராஜுவ்காந்தி சுமார் 09.00, 09.15 மணிக்கு போர்மேன் சார் சீட்டில் வந்து உட்கார்ந்தார். அதே சீட்டில் தான் இரவு 12.15 மணி வரை ராஜுவ்காந்தி சார் உட்கார்ந்திருந்தார். **Demand Register, AGL Readyness Register,** வருகை பதிவேடு, தர்மலிங்கத்திற்கு தேவையான திட்ட மதிப்பீடு கோப்புகள் ஆகியவற்றை நான் **AD** மேடம் சாந்தியிடம் அவர் கேட்டதால் எடுத்து கொடுத்தேன். **AD** சாந்தி மேடம் இரவிலேயே வந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னிடம் காட்டப்படுவது தான் நான் கொடுத்த **AGL Readyness Register** ஆகும். அதில் 67வது பக்கத்தில் தர்மலிங்கத்தின் தக்கல் மின் இணைப்புக்கான விவரங்கள் உள்ளது. அந்த **AGL Register அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வருகை பதிவேட்டில் 2ம் எதிரி சரவணனும், நானும் கையெழுத்து செய்த விவரங்கள் உள்ளது. அந்த வருகை

பதிவேடு **அ.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **Work Order அ.த.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. திட்ட மதிப்பீடு அறிக்கை **அ.த.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **30.07.2022** ல் காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரிப்பதற்கு போன் செய்து கூப்பிட்டார்கள். நடந்ததை கேட்டார்கள், நான் மேற்கூறியவற்றை சொன்னேன். **AE** ராஜுவ்காந்தி, போர்மேன் சரவணன் ஆகியோர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கிறார்கள்.

**<u>2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு சம்மந்தமாக விஜிலென்ஸ் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை தான் சொன்னேனா என்றால் ஆமாம். சுத்தமல்லி பிரிவு அலுவலகத்தில் வணிக ஆய்வாளராக **31.03.2019** முதல் **29.06.2023** வரை நான் பணிபுரிந்தேன். **2**ம் எதிரி சரவணன் சுத்தமல்லி பிரிவு அலுவலகத்தில் **30.08.2019** அன்று போர்மேனாக பணியில் சேர்ந்தார் என்றால் சரிதான். பொதுவாக மின் இணைப்பை எத்தனை வகையாக பிரிப்போம் என்றால் **Mere Service, Minor Service and Major Service** என்று மூன்று வகையாக பிரிப்போம். இந்த வழக்கின் புகார்தாரர் தர்மலிங்கத்திற்காக மின்இணைப்பு **Major Service** என்றால் சரிதான். தர்மலிங்கத்தின் மின் இணைப்பு விண்ணப்பம் தக்கல் முறையில் கேட்கப்பட்ட ஒன்று என்றால் சரிதான். **Major service** சம்மந்தமான விண்ணப்பத்தை நான் தான் பரிசீலித்து தளஆய்வு செய்து, மேல் அதிகாரிக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றால் சரிதான். தக்கல் முறையில் விண்ணப்பம் செய்திருந்த நபர்களில் தர்மலிங்கம் எத்தனையாவது நபர் என்றால் அந்த ஆண்டில் **10**ம் நபர். அவ்வாறு ஆவணங்களை பரிசீலனை செய்தபோது, வரிசை படி பரிசீலித்து தான் ஆய்வு செய்வோம் என்றால் சரிதான். தர்மலிங்கத்தின் மின்இணைப்பு அனுமதிக்கப்பட்டபோது **1, 2**ம் எதிரிகள் சுத்தமல்லி அலுவலகத்தில் பணியில் இல்லை என்றால் சரிதான். **07.02.2020** அன்று சரவணன் மாற்று பணியாக உள்ளியகுடி கிராமத்திற்கு பணி நிமித்தமாக சென்றிருந்தார் என்றால் சரிதான். அன்றைய தினம் நான் வழக்கமான பணி நேரம் வரை நான் அலுவலகத்திலேயே நான் இருந்தேனா என்றால் ஆமாம், **06.00** மணி அலுவலகத்தில் தான் இருந்தேன். நான் தான் அலுவலகத்தை பூட்டிவிட்டு, சாவியை துணை மின் நிலையத்தில் கொடுத்துவிட்டு

சென்றேன் என்றால் ஆமாம். அன்றைய தினம் (07.02.2020) நான் அலுவலகத்திதை பூட்டி சாவியை துணை மின் நிலையத்தில் கொடுத்துவிட்டு செல்லும் வரை சரவணன் அலுவலகத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் தர்மலிங்கம் அவர்களுக்கு மின்மாற்றி வைக்கப்பட்டு 03.02.2020 அன்று வேலை முடிந்துவிட்டது என்றால் சரிதான். தர்மலிங்கத்திற்கான மின் இணைப்பு வழங்குவது குறித்து யாரேனும் ஆட்சேபனை சொல்லியிருந்தார்களா என்றால் ஆமாம், அவரது பக்கத்து இடத்துக்காரர் ஆரோக்கிய சாமி மற்றும் அருகில் இருந்த சில வயல்காரர்கள் ஆட்சேபித்து இருந்தார்கள். அ.த.சா.ஆ.10 ஆவணத்தில் பிப்ரவரி மாதத்தில் 3 இடங்களில் அழிப்பான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். அந்த வெள்ளை அழிப்பான் யாரால், எதற்கு, எப்போது பயன்படுத்தப்பட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

**<u>மறு விசாரணை</u>–**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SPL.CC.No.26/2025** |
| Prosecution Witness : | **LW - 6 / PW - 5** |
| Name : சாந்தி | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **09.02.2026**

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது உதவி செயற்பொறியளராக பொய்யூர் துணை மின் அலுவலகத்தில் பணிபுரிகிறேன். 2020 ஆம் ஆண்டில் உதவி செயற்பொறியளராக கிராமியம் ஜெயங்கொண்டத்தில் பணியாற்றினேன். எனக்கு கீழ் சுத்தமல்லி, மீன்சுருட்டி, தா.பழூர் ஆகிய மூன்று பிரிவு அலுவலகங்கள் இருந்தது. விண்ணப்பம் குறித்து பரிசீலித்து எஸ்டீமேட் போட்டு பிரிவு அலுவலகங்களிலிருந்து எனக்கு வரும். 2 இலட்சத்திற்கு உட்பட்ட மதிப்பீடு என்றால் நான் அனுமதித்து பணியாணை வழங்குவேன். அதற்கு மேல் 7,50,000 இலட்சம் வரை இருந்தால் செயற்பொறியாளர் அரியலூர் அவர்களுக்கு உரிய அனுமதிக்காக அனுப்பி வைப்பேன். அதன்படி வரிசை படி உரிய தளவாட பொருட்களை மின் வாரிய அலுவலர்கள் பெற்று கொள்வார்கள். 08.02.2020 அன்று விடுமுறை நாள். அன்று ஊழல் தடுப்பு DSP இரவு 08.00 மணியளவில் எனக்கு போன் செய்து, என்னை உடனடியாக ஒரு வழக்கிற்காக சுத்தமல்லி அலுவலகத்திற்கு வரவேண்டும் என்று சொன்னார்கள். உடனே கிளம்பி அங்கு போனேன். அந்த அலுவலகத்தில்DSP, AE ராஜுவ்காந்தி, போர்மேன் சரவணன், Commercial Inspector ஆகியோர் இருந்தார்கள். ஊழல் வழக்கில் AE ராஜுவ்காந்தி, போர்மேன் சரவணன் ஆகியோர்களை கைது செய்து இருப்பதாக DSP சொன்னார். மேலும், 10,000/- ரூபாய் வாங்கியிருக்கிறார்கள் என்றும், AE

5.000/-மும், போர்மேன்  1,000/-ம், தளவாட பொருட்கள் எடுத்து வருவதற்கு வண்டி வாடகை என 4,000/- ஆக மொத்தம் 10,000/- வாங்கியிருக்கிறார்கள் என்று DSP சொன்னார். வருகை பதிவேடு, AGL Readyness Register, Demand Register, AGL Application Register, திட்ட மதிப்பீடு, பணியாணை, ஆகியவைகளை சுத்தமல்லி பிரிவு அலுவலகத்திலிருந்து அதற்காக விஜிலென்ஸ் போலிசார் கைப்பற்றினார்கள். அதற்காக என்னிடம் அ.த.சா.ஆ.7 மகசரில் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் Demand Register அ.த.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. AGL Application Register அ.த.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. AGL Readyness Register அ.த.சா.ஆ.9 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. வருகை பதிவேடு ஏற்கனவே அ.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. Work Order ஏற்கனவே அ.த.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீடு ஏற்கனவே அ.த.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. AE ராஜுவ்காந்தி, போர்மேன் சரவணன் ஆகியோர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கிறார்கள். 07.09.2020 அன்று விஜிலென்ஸ் காவல் ஆய்வாளர் அவர்கள் அலுவலகத்திற்கு என்னை வரசொல்லி விசாரித்து, வாக்குமூலம் வாங்கினார்கள்.

<u>2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் எந்த வருடத்திலிருந்து அந்த பணியில் இருந்தேன் என்றால் 2016 லிருந்து 2021 வரை இருந்தேன். பொதுவாக மின் இணைப்பை மூன்று வகையாக பிரிப்போம் என்றால் Mere Service, Minor Service and Major Service என்று மூன்று வகையாக பிரிப்போம். விஜிலென்ஸ் ஆய்வாளர் விசாரித்தபோதும் நான் முதல் விசாரணையில் சொன்னவைகளை தான் சொன்னேன். Major Service மின் இணைப்பு 2,00,000/-த்திற்கு மேல் இருந்தால் நான் உத்தரவு போட முடியாது என்றால் சரிதான். தக்கல் திட்டத்தில் Major Service என்று கேட்டிருக்கும் பட்சத்தில் வரிசை படி தான் இணைப்பு கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். மதிப்பீடு செய்யப்பட்டு, அதற்கான தொகை செலுத்தப்பட்டிருக்கும் பட்சத்தில் தான் அதற்கான வேலையை ஆரம்பிப்போம் என்றால் சரிதான். பின்னால் தொகை கட்டியவர்களுக்கு முன்கூட்டியே சர்வீஸ் கொடுக்க மாட்டார்கள் என்றால் ஆமாம். ஒரு மின்வாரிய

ஆணையில் 02.03.2018 ல் கூறியபடி பிரிவு 8 படி போர்மேனாக பணிபுரியும் நபர்களுக்கு புதிய மின் கம்பம் அமைக்கும் பணி மற்றும் மின்மாற்றி அமைக்கும் பணி கொடுக்க கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். **Major Service** சம்மந்தமான தளவாட பொருட்களை பெரம்பலூர் பண்டக சாலையில் இருந்து அரியலூருக்கு எடுத்து வந்து வைத்துவிடுவார்கள், அரியலூரிலிருந்து எடுத்து கொள்ளுவார்கள். **Major Service** சமயங்களில் தேவை அதிகம் எனில் பெரம்பலூரிலிருந்து நேரடியாக எடுத்து கொள்ளுவார்கள். பெரம்பலூர் பண்டக சாலையிலிருந்து, அரியலூருக்கோ, மற்ற பிரிவு அலுவலகங்களுக்கோ எப்படி எடுத்து வருவார்கள் என்றால் மின்வாரிய அலுவலக வாகனத்திலா அல்லது தனியார் வாகனத்திலா என்றால் அது **AE** பொறுப்பு தான், அதை பற்றி எனக்கு தெரியாது என்றால் ஆமாம். சுத்தமல்லி பிரிவு அலுவலகத்தை பொறுத்து அப்போது நான் தான் நேரடி கட்டுபாட்டு அதிகாரி என்றால் சரிதான். 08.02.2020 அன்று விஜிலென்ஸ் **DSP** அழைத்ததின் பேரில், அலுவலகத்திற்கு சென்ற நான் புகாரை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. புகார்தாரரால் கொடுக்கப்பட்ட புகாரில் என்ன எழுதியிருந்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தர்மலிங்கம் என்பவருக்கு மின்இணைப்பு கேட்டதில் மூன்றாவது வகையான **Major Service** அடங்கும் என்றால் ஆமாம். தர்மலிங்கம் அவர்களுக்கு **Major Service** வழங்க கூடாது என்று எங்கள் அலுவலகத்திற்கு ஏதேனும் ஆட்சேபனை வந்ததா என்றால் இல்லை. ஜெசிந்தாமேரி மற்றும் ஆரோக்கியராஜ் என்பவர்கள் தர்மலிங்கத்திற்கு மின்இணைப்பு வழங்க கூடாது என்று எனக்கு ஆட்சேபனை கொடுத்திருந்தார்கள் என்றால் நிறைய வருடம் ஆனதால் எனக்கு அது ஞாபகத்தில் இல்லை. தர்மலிங்கத்திற்கு மின் இணைப்பு வழங்குவதற்காக 2020 ஜனவரி மாதத்திலேயே வேலை ஆரம்பிக்கபட்டு, மண்பாதை அமைக்கப்பட்டும், பெரம்பலூர் மத்திய பண்டக சாலையிலிருந்து 03.02.2020 அன்று மின்மாற்றியும் வாங்கி வரப்பட்டது என்றால் சரிதான். தர்மலிங்கத்திற்கு அவருக்கான மின்மாற்றி சரியாக வேலை செய்யவில்லை என்றோ, சரியாக அமைக்கப்படவில்லை என்றோ என்னிடத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் எதிரிகள் கைது

செய்யப்பட்ட பின் தர்மலிங்கம் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்திற்கு நான் நேரில் போனேனா என்றால் அது எனக்கு ஞாபகத்தில் இல்லை. அ.த.சா.ஆ.13 ஆவணத்தில் பக்கம் 343 ல் முதலாவது பெயரில் வெள்ளை அழிப்பான் பயன்படுத்தப்பட்டு அதன் மேல் எழுதப்பட்டிருக்கிறது என்றால் சரிதான், ஆனால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. பக்கம் 347 லும் வெள்ளை அழிப்பான் பயன்படுத்தப்பட்டு, அழிக்கப்பட்டு, அதன் மேல் எழுதப்பட்டிருக்கிறது என்றால் சரிதான், ஆனால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அ.த.சா.ஆ.13 மற்றும் 14 ஆவணங்களில் நான் அந்த ஆவணங்களை ஒப்படைத்தாக உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணங்களை நான் ஒப்படைக்கும்போது ஏன் வெள்ளை அழிப்பான் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று நான் விசாரித்தேனா என்றால் இல்லை, அந்த ஆவணங்கள் வேண்டுமென்று விஜிலென்ஸ் அதிகாரிகள் கேட்டதால் நான் அந்த ஆவணங்களை அப்படியே கொடுக்க சொன்னேன். 08.02.2020 அன்று இரவு எத்தனை மணி வரை நான் சுத்தமல்லி அலுவலகத்தில் இருந்தேன் என்றால் மறுநாள் அதிகாலை வரை இருந்தேன்.

**<u>மறு விசாரணை–</u>**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.